**O.S.No.98/2018**

பி.வா.சா.1, திரு.ராஜசேகர்
நாள் : 22.01.2026 நேரம் : 11.45 AM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1)தாவா சொத்தானது சர்வே எண். 423/3, 423/4ல் கண்ட மொத்த சொத்தின் கீழ்புறம் கிழமேல் 5 அடி, தென்வடல் 40 அடி அளவிற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா வழக்கு வாதிக்கும் 4ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட பொது சந்துபாதை என விளம்புகை கோரி வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்குள் வாதிகளின் வீட்டின் sunshade, Pipe உள்ளது என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்தில் உள்ள வாதிகளின் வீட்டின் sunshade, Pipe ஐ அகற்ற கோரி எதிர் கோரிக்கை எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2)தாவா வழக்கு சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள எனது சொத்து வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்தில் காலியிடமாகத் தான் இருந்தது என்றால் இல்லை. ஆட்டு கொட்டாய் போடப்பட்டிருந்தது. எனது எதிர் வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ மேற்படி ஆட்டு கொட்டகை இருந்த விபரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. குறிப்பிட்டுள்ளேன். தாவா வழக்கு சொத்திற்கு மேற்கு நான் எந்த வருடம் வீடு கட்டினேன் என்றால் 2018ம் ஆண்டு கட்டினேன். தாவா வழக்கு தாக்கல் செய்து 2 வருடங்களுக்கு பின்னர் நான் எனது இடத்தில் வீடு கட்டினேன் என்றாலும், வழக்கிற்காக 2018ம் ஆண்டு எனது வீடு கட்டப்பட்டது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளின் சர்வே எண். 423/5, 423/6 என்றால் சரிதான். சர்வே எண். 423/5, 423/6ல் கண்ட சொத்தின் மேல் பகுதி சொத்து வழக்கு சர்வே எண்ணில் சேர்ந்துள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சரியல்ல. எனது இடம் தான் தாவா சர்வே எண்ணோடு சேர்ந்துள்ளது.

3)எனக்கு 44 வயதாகிறது. நான் சிறு வயதாக இருக்கும்போதே வாதிகளின் வீடு கட்டடப்பட்டுவிட்டது என்றால் சரிதான். 1ம் வாதியின் வீடு வடக்கு பக்கம் பார்த்த தார்சு வீடு என்றாலும், 2ம் வாதியின் வீடு தெற்கு பக்கம் பார்த்த ஓட்டு வீடு என்றாலும் சரிதான். 1ம் வாதியின் வீட்டிற்கு மேற்கு பக்கம் 2 ஜன்னல்கள் உள்ளது என்றால் சரியல்ல. 1 ஜன்னல் தான் உள்ளது . அந்த ஜன்னலுடன் sunshadeம் உள்ளது. தாவா சொத்திற்கு வாதிகளின் 2 ஜன்னல்ககள் உள்ளது என்றாலும் மேற்படி ஜன்னல்களுக்கு sunshadeகளும் உள்ளது என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சிறு வயதாக இருக்கும் போது வாதிகளின் வீடு இருந்த அமைப்பிலே தான் தற்போதும் உள்ளது என்றால் சரிதான். ஆனால் Pipe லைன் மட்டும் தற்போது போடப்பட்டுள்ளது.

4)வாதிகள் சட்ட காலத்திற்கும் மேலாக தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிர் கோரிக்கை கேட்டால் காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்படும் என்பதால் தான் கோரவில்லை என்றால் சரியல்ல. 2ம் வாதியின் வீட்டின் ஓட்டு வாரி தாவா சொத்தை நோக்கி சுமார் 2 1/2 அடி உள்ளது என்றால் சுமார் 2 அடி இருக்கும். நான் சிறுவயதாக இருக்கும் போதே சரியான அளவுகள் இல்லாமல் வாதிகள் எனது இடத்தில் 2 அடி சேர்த்து கட்டிவிட்டார்கள். வாதிகள் வீடு கட்டும் போது எனக்கு சுமார் 16,17 வயதிருக்கும். தாவா சொத்திற்கு மேற்கே உள்ள சர்வே எண். 423/4 எனது தகப்பனாரின் பூர்வீக சொத்து என்றால் சரிதான். எனது தகப்பனார் தற்போது உயிருடன் தான் உள்ளார். சர்வே எண். 423/4ற்கு தெற்கு பக்கம் சர்வே எண். 423/3 உள்ளது என்றாலும் அது சிங்கணன் மகன் சண்முகத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் சரிதான். சண்முகத்தின் மகன் பெயர் வசந்தகுமார் என்றால் சரிதான். சண்முகம் இறந்து சுமார் 3 வருடமாகிறது.

4)சண்முகம் மற்றும் வசந்தகுமாரிடம் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின் மூலமும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலமும் எனது தகப்பனாரிடமிருந்தும் நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி கிரயங்கள் பெறும்

போது காலியிடமாக தான் இருந்தது என்றால் சரிதான். வாதிகள் தங்கள் வீடு கட்டும் போது எனது தகப்பனார் மற்றும் சண்முகம் மற்றும் வசந்தகுமார் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் அதிகார பலம் மிக்கவர்களாய் இருந்ததால் அவர்களை தடுக்க முடியவில்லை. ஏன் அப்போது எனது தகப்பனார் மற்றும் சண்முகம் மற்றும் வசந்தகுமார் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் வாதிகள் அதிகார பலம் மிக்கவர்களாய் இருந்ததால் வழக்கு தாக்கல் செய்யவில்லை.

5)வாதிகளின் ஓட்டு வாரி தண்ணீர் தாவா சொத்தில் விழுந்து தெற்கே உள்ள ஊரணிக்கு செல்கிறது என்றால் சரியல்ல. தெருவிற்கு செல்கிறது. வீடு கட்டிய காலத்திலிருந்து ஓட்டு வாரி தண்ணீர் தாவா சொத்தில் விழுந்து தான் செல்கிறது என்றால் சரிதான். எங்கள் ஊரில் உள்ள வீடுகளுக்கு மேற்படி ஓட்டு வாரி தண்ணீர் வீடுகளுக்கிடையே உள்ள சந்து வழியாக தெற்கே உள்ள ஊரணி நோக்கி செல்கிறது என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு பின்னர் நான் கட்டிய எனது வீடானது தாவா சொத்தை நீங்கலாக தான் கட்டப்பட்டது என்றால் சரிதான். உண்மையில் வாதிகள் எனது இடத்தில் கட்டுமானம் கட்டியிருந்தால் வாதிகளின் சுவரை ஒட்டி கட்டியிருப்பேன் என்றால் சரியல்ல. வாதிகள் எனது இடத்தில் ஆக்கிரமிப்பு செய்திருந்தால் எனது தகப்பனார் வழக்கு தாக்கல் செய்திருப்பார் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

6)தாவா சொத்திற்கு மேற்கே, கிழக்கே உள்ள சர்வே எண்களுக்குரிய ஆவணங்களை தான் பி.வா.சா.ஆ.1, 4 முதல் 6, 9 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கிற்கு பின்னர் நான் கட்டிய வீட்டின் ரசீதுகள் தான் பி.வா.சா.ஆ.7,8 ஆவணங்கள் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மேற்கே உள்ள முனியசாமி என்பவர் எனது உடன் பிறந்த சகோதரியின் கணவர் என்றால் சரிதான். அவர் எனது சொத்தில் 2 அடியை ஆக்கிரமித்து கட்டிவிட்டார் என்று எனக்கும், அவருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி பிரச்சனையில் ஊர் முன்னோர்கள் முன்பாக பேசி முடிக்கப்பட்டது என்று

சொன்னால் சரியல்ல. நான் கட்டிய வீட்டிற்கு கீழ்புறம் தாவா சொத்தில் பைப் லைன் வைத்துள்ளேன் என்றால் சரிதான். எனது வீட்டின் படிகட்டையும் தாவா சொத்தை ஆக்கிரமித்து கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல.

7)எனக்கும், வாதிகளுக்கும் இடையே உள்ள உள்ளாட்சி தேர்தல் சம்மந்தமான பிரச்சனையை மனதில் வைத்து இராமநாதபுரம் மாவட்ட வருவாய் வட்டத்தில் பி.வா.சா.ஆ.10 மனுவை மூலமாக புகார் அளித்தேன் என்றால் சரிதான். ஆனால் உள்ளாட்சி தேர்தலில் உள்ள பகையின் அடிப்படையில் புகார் அளிக்கவில்லை. பி.வா.சா.ஆ.10 ல் கண்டுள்ள விசயங்கள் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. மேற்படி மனுவானது பரமக்குடி வருவாய் கோட்டாட்சியரிடம் விசாரணைக்கு வந்தது என்றால் சரிதான். மேற்படி விசாரணையின் போது வருவாய் கோட்டாட்சியர் முதுகுளத்தூர் தாசில்தாருக்கு பி.வா.சா.ஆ.11 குறிப்பாணையை தாவா சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்ய அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி அறிக்கையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முதுகுளத்தூர் தாசில்தாரோ, வருவாய் கோட்டாட்சியரோ ஸ்தலத்தில் வந்து அளக்கவில்லை என்றால் சரியல்ல.

8)அரசுக்கு பாத்தியமான இடத்தில் ஆக்கிரமிப்பு செய்தால் தான் அரசால் நடவடிக்கை எடுக்க முடியும் என்றாலும், தனி நபர் இடத்தில் ஆக்கிரமிப்பு செய்தால் சிவில் நீதிமன்றத்தில் தான் வழக்கு தாக்கல் செய்ய முடியும் என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியர் பிறப்பித்த பி.வாசா.ஆ.12 உத்தரவானது ஸ்தலத்தை அளவீடு செய்யாமல் பிறப்பிக்கப்பட்டதால் சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.12 உத்தரவு சம்மந்தமாக சாட்சிகள் விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். பி.வாசா.ஆ.13 ல் புகைப்படமானது வாதிகளின் வீட்டில் தாவாசொத்தை நோக்கி உள்ள மேல்புற சுவர் என்றால் சரிதான். மேற்படி சுவர் தான் நான் 16 வயதாக இருக்கும் போது கட்டப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.12 உத்தரவானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டு வழங்கப்பட்ட உத்தரவு என்றால் சரியல்ல.

9)வாதிகளின் வீட்டின் மேல் புற சுவரை மராமத்து பணிகள் செய்ய வழக்கு சொத்து வழியாகத்தான் செல்ல முடியும் என்றால் சரிதான். ஆரம்ப காலம் முதலே வாதிகள் தாவா சொத்தில் தான் மராமத்து பணிகள் செய்ய உபயோகித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அதே போல் எனது வீட்டின் மேல் புற சுவரையும் தாவா சொத்து வழியாக தான் பராமரிப்ப பணிகள் செய்ய முடியும் என்றால் சரிதான். தாவா சொத்து பொது சந்து இல்லை என்பதையும், எனது சகோதரியின் கணவர் எனது சொத்தை 2 அடி ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்பதையும் சாட்சிகள் மூலம் விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். தாவா சொத்து என்பது எனக்கும், வாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பொது சந்து என்றால் சரியல்ல. பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவான பி.வா.சா.ஆ.12 செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. சட்டகாலத்திற்கு மேலாக வாதிகள் கட்டியுள்ள வீட்டின் மேல்புற சுவரை இடிப்பதற்கு அரசுக்கு எந்த ஒரு உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

10)எனது எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை வாதிகளும், நானும் தாவா சொத்தின் வழியாக தான் புழங்கி வருகிறோம் என்றால் சரிதான்.

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.30 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2026.01.22 10:43:01 +0530